සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

Department of Samurdhi Development

ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT

මගේ අංකය
எனது இல DSD/HO/05/MF/01/சுற்றுநிருபம்
My No

ඔබේ අංකය
உமது இல ..........
Your No

දිනය
திகதி 2019.05.10
Date

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம் - 2019/08

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி,

வங்கிச்சங்க முகாமையாளர்களுக்கும்.

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் அங்கத்தவர்களுக்கு சமையல் எரிவாயு (L.P.Gas) வசதியினை லிட்றோ கேஸ் லங்கா நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் கடன் வசதியினை வழங்குதல்</u>**

**1. அறிமுகம் -**

சமுர்த்தி குறுநிதி வங்கி வலையமைப்புடன் இணைந்துள்ள சமுர்த்தி பயனுகரிகள் உட்பட குனைந்த வருமானம் பெறுவோருக்கு L.P கேஸ் வசதியினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான கேஸ் சிலண்டர் உள்ளிட்ட இணைப்புத் தொகுதியினை சலுகை விலையில் வழங்குவதற்கு லிட்றோ கேஸ் லங்கா நிறுவனம் யோசனை ஒன்றினை முன்வைத்திருந்தது. இவ்யோசனைக்கு வங்கி முகாமைத்துவ சபை அனுமதியினையும் வழங்கியுள்ளது.

இதற்கமைய இவ்வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதன் ஊடாக கீழ்வரும் குறிக்கோள்களை அடைந்து கொள்ளமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது

1. குறைந்த வருமானம் பெறும் வங்கி அங்கத்தவர்களின் நாளாந்த வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியளித்தல்
2. சிற்றுண்டிச்சாலை , உணவுப்பண்ட உற்பத்தி உள்ளிட்ட வருமானமீட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்களின் தொழில் நடவடிக்கைகளை இலகுபடுத்தி வருமானத்தினை உயர்வடையச் செய்தல்.
3. வங்கிக் கடன்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதனூடாக வங்கியின் நிதி நிலைபேற்றுத் தன்மையினை உருவாக்குதல்.
4. சூழல் பாதுகாப்பினை உருவாக்குவதற்கு உதவுதல்

சமையல் L.P கேஸ் வசதி தேவையுள்ள வங்கி அங்கத்தவர்களுக்கு அதனை பெற்றுக்கொடுப்பதற்கான உதவிகளை மேற்கொள்ளல் மற்றும் அதற்கான நிதி தேவையானவர்களுக்கு கடன் வசதியினை வழங்குவதற்கு தேவையான வழிகாட்டல் இத்தால் வழங்கப்படுகின்றது.

**02. வழங்கப்படும் இணைப்புத்தொகுதி தொடர்பான விபரங்கள்**

L.P கேஸ் சிலிண்டர் உட்பட வழங்கப்படும் இணைப்புத்தொகுதிப் பொருட்கள் மற்றும் அவற்றின் விலை தொடர்பான விபரங்கள் இணைப்பு இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**03. உயர்ந்தபட்ச கடன் தொகை மற்றும் கடன் தொடர்கான விபரங்கள்**

3.1 உயர்ந்தபட்சம் ரூபா 10,000/= தொகையினை கடனாக பெற்றுக்கொள்ளமுடியும். கடன்விண்ணப்பதாரியின் கோரிக்கை மற்றும் தேவைகளுக்கு அமைய ஒரு கடன்தொகையினை மாத்திரம் வழங்க முடியும்.

3.2 இவ்வேலைத்திட்டத்திற்கான புதியகடன் திட்டம் செயற்படுத்தப்படமாட்டாது என்பதுடன் தற்போது நடைமுறையில் உள்ள கீழ்வரும் கடன்திட்டங்களின் கீழ் கடன்வழங்க முடியும்.

1. நுகர்வுக்கடன் - தற்போது கூட்டுக்காப்பீட்டு வேலைத்திட்டத்துக்கு பங்களிப்புச்செய்துள்ள தகைமையுடைய அங்கத்தவர்களுக்கு
2. துரித வியாபாரக்கடன்
3. வாழ்வாதாரஅபிவிருத்திக்கடன்

} (2, 3) வருமானமீட்டும் கருத்திட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இவ்வசதி வழங்கப்படும்.

3.3 கடன்தொகையினை கோருவதில் இருந்து அனுமதி வழங்கல் வரைக்குமான அனைத்துச் செயற்பாடுகளும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ்வேலைத்திட்டத்தின் கீழ் கடன் வசதியினை வழங்கும் போது எச்சந்தர்ப்பத்திலும் நெறிப்படுத்தல் ஆலோசனைகள் மீறப்படல் ஆகாது.

3.4 வங்கிக்கடன் வசதியினூடாக மாத்திரம் இன்றி அங்கத்தவர் ஒரே தடவையில் முழுத்தொகையினையும் செலுத்தியும் இச்சமையல் எரிவாயு வசதியினை பெற்றுக்கொள்ளவும் முடியும்.

**04.சமையல் எரிவாயு வசதியினை கோரல் மற்றும் உபகரண தொகுதியினை பெற்றுக்கொள்ளல்**

4.1 வரையறுக்கப்பட்ட லிட்றோ கேஸ் லங்கா நிறுவனத்தின் உத்தியோகத்தர்களினால் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளின் ஊடாக குறைந்த வருமானம் பெறுவோருக்கு அறிவூட்டல்கள் மேற்கொள்ளப்படும். அதற்கான கூட்ட ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் என்பவை பிரிவுக்கு பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.2 பயனுகரிகளுக்கு அறிவூட்டப்பட்ட பின் பயனுகரிகளின் சுயவிரப்பத்தின் பிரகாரம் சமையல் எரிவாயு வசதி உள்ளிட்ட இணைப்புத்தொகுதியினை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் இருந்து கடன் வசதியினை பெற்றுக்கொள்ள எழுத்துமூலம் கோரல் வேண்டும்.

4.3 அங்கத்தவர் சமுர்த்தி வங்கியினூடாக சமையல் எரிவாயுத் தொகுதியினை பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவிக்கப்படின் அவர்களில் வங்கிக்கடன் வசதியினை வழங்கக்கூடிய விண்ணப்பதாரிகளிற்கு மாத்திரம் கீழ்வரும் தகவல்களை சேகரித்து வரையறுக்கப்பட்ட லிட்றோ கேஸ் லங்கா நிறுவனத்திற்கு அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு மின்னஞ்சல் மூலம் அல்லது தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

01. விண்ணப்பதாரியின் பெயர் :
02. அங்கத்தவர் இலக்கம் :
03. விண்ணப்பதாரி விண்ணப்பித்துள்ள கேஸ் தொகுதியின் வகை :
04. முகவரி :
05. தொலைபேசி இலக்கம் :
06. சமுதாய அடிப்படை அமைப்பின் பெயர் :

**தபால் முகவரி:**

குமார ஜெயவர்தன
சிரேஸ்ட பிரதேச விற்பனை முகாமையாளர்,
லிட்றோ கேஸ் லங்கா நிறுவனம்,
யூனியன் பிளேஸ்,
கொழும்பு – 02

4.4 பிரிவுக்குப் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அங்கத்தவர்களுக்கு கடனை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை செய்து கொடுப்பதன் பூரணப்படுத்தப்பட்ட கடன் விண்ணப்பப் படிவங்களை வங்கியில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சமுர்த்தி வங்கியினால் உரிய பரிசீலணைகன் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் சிபாரிசுடன் கட்டுப்பாட்டு சபையின் அனுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

4.5 கடன் தொகை அனுமதிக்கப்பட்டதன் பின்னர் வ/ப லிட்றோ கேஸ் லங்கா நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர் உபகரணத்தொகுதிக்கான பணக்கொடுப்பனவினை தமது அங்கத்தவர் சேமிப்பு கணக்கிலிருந்து கழிப்பீடு செய்து உரிய நிறுவனத்திற்கு வழங்கும் பொருட்டு அங்கத்தவரின் சம்மதத்தினை எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4.6 கடன்தொகை அனுமதிக்கப்பட்டதன் பின்னர் முகாமையாளர் கடன் விண்ணப்பதாரிக்கு தனது கடன்தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

4.7 கடன்தொகை அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மாத்திரமே வ/ப லிட்றோ கேஸ் லங்கா நிறுவனத்தினால் உரிய கேஸ் சிலிண்டர் உட்பட உபகரணத்தொகுதியினை விண்ணப்பதாரிக்கு (அங்கத்தவர்களுக்கு) வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.8 அதன் பின்னர் விண்ணப்பதாரி (அங்கதவர் ) உரிய கேஸ் சிலிண்டர் மற்றும் பொருட் தொகுதியினை பெற்றுக்கொண்டமைக்கான படிவத்தின் பிரதியினை வங்கி முகாமையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். (வ/ப லிட்றோ கேஸ் லங்கா நிறுவனத்தின் விற்பனை முகவர்)

4.9 வ/ப லிட்றோ கேஸ் லங்கா நிறுவனம் அல்லது அவரது அதிகாரம் பெற்ற விற்பனை முகவர் மூலம் உரிய கேஸ் பொருட்தொகுதி வழங்கப்பட்டதன் பின்னர் விலைப்பட்டியல் (Invoice) மற்றும் பொருட்கள் பெற்றுக்கொண்டமைக்கான படிவத்தின் தகவல்களுக்கமைய உரிய தொகையினை கீழ்குறிப்பிடுமாறு கணக்குப் பதிவுகளை மேற்கொண்டதன் பின்னர் அதற்கான காசோலையினை விற்பனை முகவரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**05. அங்கத்தவர்களின் பொருட்டு வ/ப லிட்றோ கேஸ் லங்கா நிறுவனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட விற்பனை முகவரிடம் காசோலையினை வழங்குதல் மற்றும் வங்கியின் தரகுக்கட்டணத்தை சேகரித்தலும்.**

5.1 சமுர்த்தி வங்கிகள் கீழ்குறிப்பிடப்படும் விதத்தில் உரிய நிறுவனத்திற்கான பணத்தினை அனுப்புவதுடன் தரகுத்தொகையினையும் கணக்கு வைத்துக்கொள்ளல் வேண்டும். (அங்கத்தவரின் கோரிக்கைக்கு அமைய)

பற்று – அங்கத்தவர் சேமிப்புக்கணக்கு (அங்கத்தவரிடம் இருந்து அறவீடு செய்யப்பட்ட தொகை)

வரவு – பெற்ற வருமானம் நானாவிதக் கணக்கு (வங்கிக்குரிய தரகுத்தொகை)

வரவு – நடைமுறைக்கணக்கு ( அங்கத்தவர் செலுத்திய தொகையில் தரகுத்தொகை கழிக்கப்பட்ட பின்னர் உள்ள மீதி)

5.2 தரகுக்கூலியானது அந்தந்த பொருட்தொகுதிக்கமையய கணிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் வ/ப லிட்றோ கேஸ் லங்கா நிறுவனத்தின் விற்பனை முகவருக்கு செலுத்த வேண்டிய மொத்த தொகையில் இருந்து வங்கிக்கு உரித்தான தரகுத்தொகையினை கழித்துக்கொண்டு மீதித்தொகைக்கு காசோலையினை வரைதல் வேண்டும். (விலைப்பட்டியல் குறிப்பிட்டுள்ள தொகைக்கு)

5.3 காசோலைகள் குறுக்குக் கோடிடப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டவரின் பெயருக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விலைப்பட்டியல் (Invoice) கிடைக்கப் பெற்று 45நாட்களுக்குள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5.4 இவ் வேலைத்திட்டத்தின் கீழ் இணைப்பு 2 இன் பிரகாரம் தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு ஒன்றினை வங்கி செயற்படுத்திச் செல்லல் வேண்டும்.

**06. பொதுவான விடயங்கள்**

6.1 **இவ்வேலைத்திட்டம் 2019.03.11 இல் இருந்து 2020.09.10 வரை மாத்திரம் செயற்படுத்தப்படல் வேண்டும்**. இதன் பின்னர் இவ் வேலைத்திட்டம் இரத்துச் செய்யப்படும். மேலும் இக் கால எல்லை முடிவதற்கு முன்னர் தேவை ஏற்படின் இவ்வேலைத்திட்டத்தினை இரத்துச்செய்வதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தீர்மானம் எடுப்பின் அதன் பிரகாரம் அது தொடர்பாக அறிவித்தல் ஒன்றினை விடுக்கும் தினத்தில் இருந்து இவ்வேலைத்திட்டம் முடிவுறுத்தப்படும்.

6.2 சமுர்த்தி வங்கியின் அங்கத்தவர்கள் இக்கடனை மீளச் செலுத்தும் போது மாதாந்தம் சமமான தவணைக் கட்டணங்களாக திருப்பிச்செலுத்த இடமளிக்கப்படுகின்றது.

6.3 இவ்வேலைத்திட்டம் தொடர்பாக வங்கிக் கட்டுப்பாட்டுச் சபைக்கு தெளிவுபடுத்தி அவர்களின் இணக்கப்பாட்டுடன் செயற்படுத்துவது பொருத்தமானதாக அமையும்.

6.4 இவ்வேலைத்திட்டத்தின் கீழ் உரிய கேஸ் சிலிண்டர்கள் உள்ளிட்ட பொருட்தொகுதியினை பொறுப்பெடுத்து வங்கி / பிரிவுக் காரியாலயங்களில் கையிருப்பில் வைத்து பங்கீடு செய்தல் முழுமையாக தவிர்க்கப்படல் வேண்டும். இது தொடர்பாக வங்கி முகாமையாளர் உள்ளிட்ட பணிக்குழுவினர் முழுமையான அவதானத்தை செலுத்தி செயற்படல் வேண்டும்.

6.5 இவ்வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கடன் திட்டம் தொடர்பாக பிரிவுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் அல்லது முகாமையாளர்கள் மூலம் அங்கத்தவர்களுக்கு வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6.6 உரிய அங்கத்தவரின் சுயவிருப்பத்திற்கமையவே இதற்கான கோரிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் வேண்டும். இதற்கான தகவல்களை வழங்கும் நடவடிக்கைகள் மாத்திரம் எங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6.7 இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வ/ப லிட்றோ கேஸ் லங்கா நிறுவனத்தின் கீழ்குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

**குமார ஜெயவர்த்தன** (சிரேஷ்ட பிரதேச சந்தைப்படுத்தல் முகாமையாளர் ) – **077-7775658**

**தரிந்து தேஷான் (**சிரேஷ்ட பிரதேச சந்தைப்படுத்தல் நிறைவேற்றுனர்) – **077-8917526**

**S.E.R.D.M.S.P.பண்டார,**

பணிப்பாளர் நாயகம்.

**பிரதிகள்** :-

01. செயலாளர், ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சு – தகவலுக்காக
02. சகல மாவட்ட செயலாளர்களுக்கும். - தகவலுக்காக
03. பிரதான கணக்காளர் , சமு.அபி.திணைக்களம் - - தகவலுக்காக
04. பிரதான உள்ளக கணக்காய்வாளர் , சமு.அபி.திணைக்களம் - தகவலுக்காக
05. சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காகவும், உ.ந.பொருட்டும்.
06. சகலபிரதேச செயலாளர்களுக்கும் - தகவலுக்காகவும், உ.ந.பொருட்டும்.
07. சகல நிறைவேற்று சபை தலைவர்களுக்கும் வங்கிச்சங்கம் - தகவலுக்காக
08. சகல கட்டுப்பாட்டுசபை தலைவர்களுக்கும் - சமுர்த்தி வங்கி - தகவலுக்காக

TRANSLATED BY - I ALIYAR

**சமையல் L.P கேஸ அடங்கிய சிலிண்டர் உட்பட இணைப்புத் தொகுதியின் விலைமனு தொடர்பான விபரங்கள்**

| **தொகுதி** | **விபரம்** | **சந்தை விலை (ரூபா)** | **சமுர்த்தி பயனுகரிகளுக்கான விசேட விலை (ரூபா)** | **சமுர்த்தி வங்கியின் தரகுக்கட்டணம் (ரூபா)** |
|---|---|---|---|---|
| **01** | 12.5Kg சிலிண்டர் | 4400.00 | 4265.00 | |
| | கேஸ்(கொழும்பு விலை) | 1733.00 | 1700.00 | |
| | ரெகுலேட்டர் தொகுதி | 1405.00 | 1245.00 | |
| | 2 அடுப்புகளை கொண்ட கேஸ் குக்கர் (சாதாரண அடுப்பு) | 3754.00 | 2785.00 | |
| | மொத்த தொகை | **11292.00** | **9995.00** | **550.00** |
| **02** | 05Kg சிலிண்டர் | 3300.00 | 3300.00 | |
| | கேஸ்(கொழும்பு விலை) | 693.00 | 683.00 | |
| | ரெகுலேட்டர் தொகுதி | 1405.00 | 1245.00 | |
| | 2அடுப்புகளை கொண்ட கேஸ் குக்கர் (சாதாரண அடுப்பு) | 3754.00 | 2785.00 | |
| | மொத்த தொகை | **9152.00** | **8013.00** | **467.00** |
| **03** | 12.5Kg சிலிண்டர் | 4400.00 | 4400.00 | |
| | கேஸ்(கொழும்பு விலை) | 1733.00 | 1700.00 | |
| | ரெகுலேட்டர் தொகுதி | 1405.00 | 1245.00 | |
| | மொத்த தொகை | **7583.00** | **7345.00** | **353.00** |
| **04** | 05Kg சிலிண்டர் | 3300.00 | 3300.00 | |
| | கேஸ் | 693.00 | 683.00 | |
| | ரெகுலேட்டர் தொகுதி | 1405.00 | 1245.00 | |
| | மொத்த தொகை | **5398.00** | **5228.00** | **253.00** |